# பயங்கரவாதத்தை முறியடிக்க எதிர்க்கட்சி

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 1[illegible]
இதழ் 120

யாழ்ப்பாணம் வைகாசி 29 [illegible] 18 சனிக்கிழமை (12-6-71)

# முழு ஆதரவு
## செனட்டில் கே.எம்.பி.

கோட்டை வெள்ளி பயங்கரவாத நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு எதிர்க்கட்சி பூரண ஆதரவை வழங்கும் என செனட் சபையில் தெரிவிக்கப்பட்டது.

செனட்சபையில் செனட்டர் திரு கே எம் பி ராஜரத்தின பேசுகையில், பயங்கரவாதிகளை முறியடிக்க பிரதமர் விடுத்த நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சி தனது பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் தெரிவிப்பதுடன் பக்கபலமாக இருந்து உதவுவதாக உறுதிகூறினார்.

நாட்டிற்கு ஆபத்து ஏற்படும்போது அதனை முறியடிக்க எந்தக் கட்சியைச்சேர்ந்தவராக இருந்தாலும் ஒன்றுபட்டு ஆபத்தை ஒழிக்க வேண்டியது ஒவ்வொருவரது கடமையாகும் என்றும் திரு கே எம் பி கூறினார்.

மற்றும் சில செனட்டர்களும் பேசினார்கள்.

## புதிய அரசியலமைப்பு

# 'நீதிபரிபாலன சுதந்திரம் பற்றி அஞ்சத் தேவையில்லை
# இப்போதைய சட்டங்களே தொடர்ந்து இருக்கும்'

### டாக்டர் என். எம். உறுதி

கொழும்பு, வெள்ளி புதிய அரசியலமைப்பில் நீதிபரிபாலனத்துறை சுதந்திரம் பற்றி அச்சம் கொள்ள வேண்டியதில்லை இப்போது நடைமுறையிலுள்ள சட்டங்கள் தொடர்ந்து நீதிபரிபாலனத்துறையில் இருந்துவரும் என்று நிதி அமைச்சர் டாக்டர் என். எம் பெரேரா உறுதி தெரிவித்தார்.

அரசியல் நிர்ணயசபை இன்று அதன் தலைவர் திரு ஸ்ரான்லி திலகரத்தின தலைமையில் கூடியது.

நீதிபரிபாலனத்துறை சுதந்திரமாக இயங்க வேண்டுமென்பது தொடர்பான யு என் பி யின் திருத்தப்பிரேரணையை திரு ஜே ஆர் ஜெயவர்த்தன சமர்ப்பித்துப் பேசினார்.

டாக்டர் என் எம் பெரேரா பதிலளித்துப்பேசினார்.

டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில் கூறியதாவது:-

நீதிபதிகளை இப்போதுள்ளது போலவே பிரதமர் சிபார்சு செய்வார். ஜனாதிபதி நியமிப்பார். இப்போதுள்ள சட்டங்கள் தொடர்ந்தும் பேணப்படும் சட்டங்களில் எவ்வித மாற்றமுமிருக்காது, புதிய அரசியலமைப்பில் நீதிபரிபாலனத்துறை குறித்து அச்சம் கொள்ளவேண்டியதில்லை

#### திருத்தப் பிரேரணை

ஜனாதிபதி ஆட்சிமன்ற அங்கத்தவராலும், நாட்டின் ஸ்தலஸ்தாபன அங்கத்தவராலும் தெரிவு செய்யப்படவேண்டுமென்றும் பிரதமர் சிபார்சு இல்லாது ஜனாதிபதியே நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்றும் யு என் பியின் திருத்தப் பிரேரணை கூறுகிறது

திரு டட்லி சேனநாயக்க பேசுகையில், ஜனாதிபதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருக்கவேண்டும். நியமிக்கப்படும் ஒருவராக இருக்கக்கூடாது. அவருக்கு பூரண அதிகாரம் வழங்க வேண்டும். இப்போதுள்ள அவசரகாலச்சட்டம் நான் பிரதமராக இருந்தபோது கொண்டுவரப்பட்டது. அப்போது இதனை எதிர்த்தார்கள். ஆனால் அது இன்று ஆட்சியாளர்களுக்குப் பெரிதும் உதவுகின்றது என்றார்.

அரசியல் விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி' சில்வா பேசுகையில், ஏதேச்சாதிகாரமாக ஜனநாயகபோர்வையில் சர்வாதிகாரமாக நடப்பதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டுகிறார்கள். ஆனால் உண்மை என்ன என்பதை விரைவில் உணர்வார்கள் என்றார்.

புதிய அரசியல் அமைப்புக்கான 6வது அடிப்படைத் தீர்மானம் இன்று சமர்ப்பிக்கப்பட்டது.

---

## கடலிலே உயிருக்குப் போராடினார்கள்!
### பொலிஸார் காப்பாற்றினர்

காவிட்டபுரம், வெள்ளி கடலில் வள்ளம் கவிழ்ந்து ஆபத்தில் சிக்கிய மீனவர்கள் மயிரிழையில் உயிர்தப்பினர். தக்கசமயத்தில் கரையூர்ப் பொலிசார் இவர்களைக் காப்பாற்றினர்.

நேற்று முன்தினம் கரையூரில் இருந்து 4 மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்று கடலில் மீனபிடிக்கும் போது கடும் காற்று வீசியதால் வள்ளம் கவிழ்ந்தது. இதனால் மீனவர் நால்வரும் அலைகளால் அள்ளுண்டு தத்தளித்தார்கள். இவர்களில் ஒருவர் தத்தளித்து ஓடி விதமாகக்கரை சேர்ந்து கரையில் இருந்த விசேஷ பொலிஸ் படையைச் சேர்ந்த ஆ. செபஸ்தியாம்பிள்ளை, எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை ஆகியோரிடம் சம்பவத்தைக் கூறியதும் கரையூர் பொலிசார் வலைஞர்களுடன் சென்று மூவரையும் கரைசேர்த்தனர்.

பிரஸ்தாப 3 பேரையும் காணவில்லையே என்று அவரது உறவினர்கள் கரையூர் கடற்கரையில் ஒலமிட்டார்களெனினும் சிறிதுநேரத்தில் அங்கு மகிழ்ச்சி ஆரவாரம்நிலவியது.


## திருமண அழைப்பு

மணமகன்:
**வைரமுத்து ஞானகுரு**
[நில அளவையாளர் மட்டக்களப்பு]

மணமகள்:
**சிவசுப்பிரமணியம் பத்மாதேவி**

காலம்: 30-ம் திகதி (13-6-71) ஞாயிற்றுக்கிழமை பி. ப. 5-30 க்கும் 6-30 க்கும் இடையில்

இடம்: தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோவில்

உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தனித்தனி அழைப்பிதழ் அனுப்பவியலாமைக்கு மன்னிக்கவும்.

பி. வைரமுத்துவும். பாரியாரும்
ஞானதெளி வல்வெட்டித்துறை.

சி. வே. சிவசுப்பிரமணியமும் பாரியாரும்
[உரிமையாளர்: ராஜா ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்,
சுப்பிரமணியன் சோடா கம்பெனி]
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

2838


## தகவல்களைத் தொடர்ந்து மேலும் பலர் கைது!

கோட்டை, வெள்ளி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள பயங்கரவாதிகள் அளித்த தகவல்களைத் தொடர்ந்து பெருந்தொகையானபயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று மாத்தறை அனுராதபுரம் பதுளை, பொலநறுவை மாவட்டங்களில் 26 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர், அனுராதபுரத்தில் இராணுவத்தினர் தேடுதல் நடத்தியபோது பெருந்தொகையான ஆயுதங்களையும் உணவுப் பொருட்களையும் கைப்பற்றியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று பயங்கரவாதிகளால் எதுவித அசம்பாவித சம்பவங்களும் இடம்பெறவில்லையென கூறப்பட்டது.

பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து காடுகளில்தேடுதல் நடாத்தி வருகின்றனர்

---

### ஊர்காவற்றுறை

## கடற்கோட்டை சிறைச்சாலையானது

கோட்டை, வெள்ளி ஊர்காவற்றுறை கடற்கோட்டை சிறைச்சாலையாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஊர்காவற்றுறைக்கு அணித்தாக உள்ள ஹமென் ஹெயில் எனும் கடற்கோட்டையையும் அக்கோட்டையில் வித்தியோதய பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான காணியையும் கட்டிடங்களையும் வித்தியலங்கார பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான கனி தலுகமையில் உள்ள கட்டிடங்களையும் சிறைச்சாலைகளாக இருப்பதாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

5000 பறியல் தென்னைகாய் விற்பனைக்குண்டு. சடைய காடு தோட்டம்; வேம்போடு கேணி பன்ன ஆடுகளும் 1 வருஷ லெக்கோன் கோழிகளும், சேவல்களும் விற்பனைக்குண்டு. விவேகானந்தன், வல்வெட்டித்துறை. 3176

### மரண அறிவித்தல்

**தி. சுப்பிரமணியம்**

சிறுப்பிட்டியைச் சேர்ந்த தில்லைநாதர் சுப்பிரமணியம் (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) காலமாகிவிட்டார். அன்னாரது ஈமக்கிரியைகள் 11-6-71 வெள்ளிக்கிழமை நடைபெற்றன. தகவல் தருபவர்: ஆ. விநாயகமூர்த்தி சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. 3494

### சோதிடம்

ஆயர்பாடி இராசிப்பலன். இப்புத்தகம் உங்கள் ஒரும் பத்தாரின் அரிய உதவியாளன். இன்றே வாங்கி வாசிக்கவும் உத்தியோகமா, வியாபாரமா, விவாகப்பிரச்னையா, பிரயாணமா எதுவும் இதில் உளது. உங்கள் வறுமையைப் போக்கும், நோய் பிணிகளை மாற்றும் சுவையான புத்திமதிகள் தரப்பட்டுள்ளன. எங்கும் கிடைக்கும். வே. த. மயில்வாகனம், ஆயர்பாடி சோதிடர், மாவிட்டபுரம், தெல்லிப்பளை. 3175

### விற்பனைக்கு

5 ஸ்ரீ 9546 இலக்க B. S. A. (1.75 c. c.) மோட்டார் சைக்கிள், 1800 மைல் ஓடியது, நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. 162 A, காங்கேசன் வீதி, யாழ்ப்பாணம். 3177

### விற்பனைக்கு

பாடசாலை மேசைகள், வாங்குகள், நல்ல நிலையிலுள்ள றெமிங்ரன் ஸ்ராண்டெட் தமிழ் தட்டெழுத்து யந்திரம் விற்பனைக்குண்டு. செல்வராஜன், செட்டித்தறை வேலை, நெல்லியடி, கரவெட்டி. 3164

### அதிபராக நியமனம்

சுழிபுரம், வெள்ளி

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி உப அதிபராகக் கடமையாற்றி வந்த திரு. வே. நடராசா இம்மாதம் முதல் சுழிபுரம் சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### இடமாற்றம்

பருத்தித்துறை, வெள்ளி

புங்குடுதீவு மகாவித்தியாலய ஆசிரியை திருமதிசரோஜினிதேவி தம்பிப்பிள்ளை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.


**ராணி** (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி.ப. 2-00 5-00
ஜெமினி கணேஷன் கே. ஆர். விஜயா நடித்த

# ராமன் எத்தனை ராமனடி

**ரீகல** (யாழ்ப்பாணம்)
காலை 10-30 பி.ப. 2-30
முத்துராமன், தேவிகா, நாகேஷ், சோ நடித்த

# தேவி

'தேவி ஸ்ரீ தேவி' பாடலை இத்திரையரங்கில் (Westrex Sound)ல் கேட்டு மகிழுங்கள்

Daily at 6-00 p. m Only
Ursula Andress
in
THE SOUTHERN STAR
(Color)

**வெலிங்டன்** யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-15, பி. ப. 2-00, 5-15 மணி

★ ஜெய்சங்கர்
★ வாணிஸ்ரீ
★ லக்ஷ்மி
நடித்த

# கன்னிப் பெண்

**கெப்பிட்டல்**
காலை 10, பி.ப. 2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

**லிங்ஸ்லி**
காலை 10, பி.ப. 2-00 மணி
பாலும் பழமும்

**ஜெமலன்**
காலை 10, பி.ப. 2-00 மணி
பார் மகளே பார்

**பிளாசா**
காலை 10, பி.ப. 2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

**நாகம்ஸ்சினிமா**
சுன்னாகம்
தினசரி பி.ப 2-00, 5-45
எம். ஜி. ஆர். - அஞ்சலிதேவி நடித்த
மர்மயோகி
(புதிய கொப்பி)

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி பி.ப 2-30, 5-30
ஜெய்சங்கர் - விஜயநிர்மலா நடித்த
உயிரா மானமா

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி பி. ப 2-30, 6-30
ராஜன் - நிர்மலா நடித்த
சக்கரம்

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 5-30
எம். ஜி. ஆர் - பானுமதி நடித்த
மலைக்கள்ளன்

**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
Daily 4-30 6-30 p.m.
FIVE MILLION
YEARS TO EARTH

காலை 10-30 பி.ப. 2-00
காந்தாராவ்-ராஜசுலோசனா நடித்த
பாட்டி சொன்ன கதை

நாளை முதல்
சுந்தரராஜன்-லக்ஷ்மி
நாகேஷ்-ராகினி நடித்த
நவக்கிரகம்


வடமராட்சியில்

# ஒருவாரம் நடக்கும் கரபந்தாட்டம்

அம்பன், வெள்ளி

விளையாட்டு அமைச்சின் ஆதரவில் ஒரு வாரத்திற்கு கரபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. இப்போட்டிகள் வடமராட்சி வடக்கு கிழக்கு காரியாதிகாரிபிரிவில் இம்மாதம் 21-ந் திகதி ஆரம்பமாகி 28-ந் திகதி முடிவடையவிருக்கின்றன.

போட்டிகளில் பங்கு கொள்ளவிருக்கும் கழகங்களும் திகதிகளும் வருமாறு: 23-ந் திகதி அல்வாய் இளங்கோ விளையாட்டுக்கழகம் 24-ந் திகதி பொலிகண்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் 25-ந் திகதி கெருடாவில் இளைஞர் விளையாட்டுக்கழகம் 26-ந் திகதி புலோலி கிழக்கு சவுளுப் இளைஞர் விளையாட்டுக்கழகம் 27-ந் திகதி அம்பன் யங்லையன்ஸ் விளையாட்டுக்கழகம்.

இந் நிகழ்ச்சிகளுக்கு வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி திரு மு தம்பிமுத்துவும் ஜெ. ஜே. தேவசகாயமும் தலைமை தாங்குவார். இதற்கான ஒழுங்குகளை விளையாட்டுப் போதனாசிரியர் திரு. சு. கதிர்காமத்தம்பி கவனித்து வருகின்றார்.

### சில்லாலை ச. ச. நி. வெற்றி

சுழிபுரம், வெள்ளி

வலிமேற்கு விளையாட்டுக் கழகங்களின் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சில்லாலை சனசமூக நிலையக் கோஷ்டியினரும் வட்டு கிழக்கு நேருஜி சனசமூக கோஷ்டியினரும் மோதிக் கொண்டதில் நருஜிகோஷ்டியினர் இரண்டாவது ஆட்டத்தில் மட்டும் வெற்றி பெற்றனர், சில்லாலைக் கோஷ்டியினர் முதல் ஆட்டத்திலும் 3-வது ஆட்டத்திலும் வெற்றி பெற்றனர். திரு. கா. துரைசிங்கம் போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

பாடசாலைகளில்

### இராணுவம் விசாரித்தது

பருத்தித்துறை, வெள்ளி

கடந்த 9ந் திகதி பாடசாலைகள் மூடப்படுவதற்கு முன்னரும் வடமராட்சியில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் இராணுவத்தினர் விஜயஞ்செய்து பிரச்னைகள் ஏதாவது இருக்கின்றனவா என்று பாடசாலை அதிபர்களை விசாரித்துச் சென்றனர். ஆசிரியர் மாணவர் வருகைபற்றி விபரங்களையும் அவர்கள் திரட்டிச் சென்றனர். அன்றைய தினம் பாடசாலைக்கு வருகை கொடுக்காத ஆசிரியர், மாணவர் பற்றிய விபரங்களையும் அவர்கள் கோரினர்.

### கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசப் புடைவைக்கடையில் ஒரு கூப்பன் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் காரியாலய நேரத்தில் வந்து அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்

### சட்டப் பரீட்சையில் தேறினார்

பருத்தித்துறை, வெள்ளி

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி ஆசிரியர் திரு. வி. பாலசிங்கம் இலங்கைப் பல்கலைக்கழக இறுதிச் சட்டப் பரீட்சையில் (எல். எல். பி) பரீட்சையில் தேர்ச்சிபெற்றுள்ளார்.

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 29-ந் திகதி (12-6-71)

மேஷம்: ஆராய்ச்சியாளர்களுக்கு பொன்னான தினம். அறிவுத்தாகம் மேலிடும். இனபந்துக்களின் கொண்டாட்டங்களும் இடம்பெறும்

ரிஷபம்- போதுமென்ற மனத்துடன் புறப்படுவீர்கள். பிறருக்கு உதவுவதில் உவகை ஏற்பட முடியும். வீட்டிலும் நல்ல சூழ்நிலை நிலவும்.

மிதுனம்: மனதில் அமைதி குன்றும் எதிரிகள் எக்காளமிடுவர். மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும். அமைதியே நன்று

கடகம். அன்பின் பிணைப்பு உங்களைப் பரவசத்தில் ஆழ்த்தும். களங்திரவழியால் கனிவான சம்பவங்கள் இடம்பெறும் மகிழ்ச்சிகரமான தினம்.

சிம்மம்: நாள் எல்லாம் அலைச்சல் உடல்நலிவு தோன்றும். பிணிக்கு இடம் கொடாது சுகாதாரத்தைப் பேணவும்.

கன்னி: தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள், சுற்றுடலில் மதிப்பு உயரும். புண்ணிய ஸ்தலம் ஒன்றுக்கு யாத்திரை மேற்கொள்ளப்படலாம்.

துலாம்: தொழில் துறையில் வெற்றிக்கு இட்டுமுண்டு புதிய முயற்சிகளில் அதிக உற்சாகம் பிறக்கும் கலையான தினம்.

விருச்சிகம்: வணிகத்துறையில் புதிய வாய்ப்புகள் ஏற்படும். சொத்துவிவகாரத்தில் நல்ல முடிவு தென்படும். பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும்.

தனுசு: வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம்.

மகரம்: கன்னல்மொழி பேசி காரியத்தை சாதிப்பீர்கள். கவர்ச்சிகரமான சம்பவங்களும் இடம்பெறும்

கும்பம்: ஏகத்தின்சாயல் நிழல்போலத் தொடரும். இளர் வாழ்க்கையில் பிரிவுத் துயர் வேதனையைத் தரும்.

மீனம்: வசீகர ஜாலம் செய்வதில் வல்லவராவீர், இனிக்கப்பேசி எதையும் சாதித்துவிடுவீர். பணவரவு சரளமாக இருக்கும்,

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


இப்பொழுது திரையிடப்படுகிறது!
யாழ். வின்ஸர் திரையில்
தினசரி காலை 10-30, பி. ப. 2-00 மாலை 5-00 மணி

★ ஜெய்சங்கர் ★ பாரதி ★ சுந்தரராஜன்
★ நம்பியார் ★ நாகேஷ்
நடித்த

# நில்! கவனி!! காதலி!!!

நிலைமைகளை நேரில் ஆராய்ந்தறிவதற்காக

# பிரிட்டிஷ் ஆட்சிமன்றக் குழு கிழக்கு பாகிஸ்தானுக்கு வரும்

## 50 லட்சம் மார்க்குகளை மேற்கு ஜெர்மனி வழங்கும்

### இந்திய மந்திரி சுவர்ண்சிங் பிரஞ்சுத்தலைவர்களுடன் ஆலோசனை

பொன், ஜூன் 11

கிழக்குப் பாகிஸ்தானில் உருவாகியுள்ள நிலைமைகள் குறித்து மேற்கு ஜெர்மன் அரசாங்கம் பெரிதும் கவலை கொண்டுள்ளது. இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மிக விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மேற்கு ஜெர்மனி வலியுறுத்தியுள்ளது.

கிழக்குப்பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குள் வந்துள்ள அகதிகளின் நிவாரணத்துக்கென 50 லட்சம் மார்க்குகளை வழங்குவதென்றும் மேற்கு ஜெர்மனி முடிவுசெய்துள்ளது.

கிழக்குப்பாகிஸ்தான் நிலைமைகளை நேரில் பார்த்து கணிப்பெடுப்பதற்கென பிரிட்டிஷ் ஆட்சிமன்றக் குழுவொன்று விரைவில் கிழக்குப்பாகிஸ்தானுக்குப் போகவிருக்கின்றது.

ஐரோப்பிய நாடுகளுக்குப்போயிருக்கும் இந்திய வெளிஉறவு அமைச்சர் திரு சுவர்ண்சிங் இப்பொழுது பாரிஸில் பிரஞ்சுத் தலைவர்களுடன் கிழக்குப் பாகிஸ்தான் நிலைமை பற்றி ஆலோசனைகள் நடத்திவருகிறார்.

மேற்கு ஜெர்மன் பிரதம மந்திரி திரு வில்லி பிராண்டுடன் இந்திய வெளி உறவு அமைச்சர் திரு சுவர்ண்சிங் நடத்திய பேச்சுக்கள்பற்றி அவர் திருப்தி தெரிவித்துள்ளார். இரு தலைவர்களும் பொன் நகரில் நடத்திய பேச்சுக்களின்பின்னர் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையில் மேற்கு ஜெர்மன் அரசாங்கம் கிழக்குப் பாகிஸ்தான் நிலைமை குறித்து தனது அக்கறையைத் தெரிவித்திருக்கின்றது. கிழக்குப்பாகிஸ்தான் நிலைமைக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும் என்றும் மேற்கு ஜெர்மனி வலியுறுத்தியிருக்கின்றது.

திரு. சுவர்ண்சிங்மேற்கு ஜெர்மன் வெளிநாட்டு அமைச்சர் திரு ஷீலுடனும் ஆலோசனைகள் நடத்தினார்.

மேற்கு ஜெர்மன் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியபின் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசிய திரு சுவர்ண்சிங் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து அகதிகள் வெளியேறி வருவதை நிறுத்துவதற்கான நிலைமையை உருவாக்கும்படி பாகிஸ்தான் அரசாங்கத்தை உலக சமுதாயம் நெருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். இந்தியாவுக்குள் வந்துள்ள கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளை மனிதாபிமானத்தின்பேரால் தான் இந்தியா பராமரித்து வருகின்றது. அவர்களை நிரந்தரமாக வைத்துக்கொள்வது எமது நோக்கமல்ல. அவர்கள் மீண்டும் தம் தாயகத்துக்குத் திரும்பிச் செல்வதற்கான நிலைமையை ஏற்படுத்தவேண்டும் என்றார் திரு சுவர்ண்சிங். கிழக்குப் பாகிஸ்தான் நிலைமைக்கு உடனடியாகத் தீர்வுகாணப்படாவிட்டால் வியட்னாம் போன்று அங்கும் நிலைமை ஒன்று உருவாகக்கூடும் என்று அவர் எச்சரித்தார்.

திரு சுவர்ண்சிங் பொன்னிலிருந்து பாரிஸ் போய்ச் சேர்ந்திருக்கிறார். பிரஞ்சுத் தலைவர்கள் அதிபர் பொம்பிடோ வெளிநாட்டமைச்சர் ஆகியவர்களுடன் திரு சுவர்ண்சிங் இன்று ஆலோசனைகள் நடத்துவார்.

மேற்குப் பாகிஸ்தான் ராணுவ ஆட்சியாளர்கள் கிழக்குப்பாகிஸ்தானில் பயங்கரத்தனமான அடக்குமுறைகளை நடத்திவருகிறார்கள் என்று திரு சுவர்ண்சிங் குறிப்பிட்டார்.

#### பிரிட்டிஷ் ஆய்வுக் குழு

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் பற்றி நேரில் அறிந்து வருவதற்காக பிரிட்டிஷ் பார்லிமெண்ட் குழுவொன்று விரைவில் கிழக்குப் பாகிஸ்தானுக்குப்போகும் என்று தெரிகின்றது. இத்தகவலை பி. பி. ஸி அறிவித்தது.

நேற்று பிரிட்டிஷ் காமன்ஸ்சபையில் கிழக்குப்பாகிஸ்தான் நிலைமைபற்றி எதிர்க்கட்சித் தலைவர்கள் காரசாரமாகப் பேசினார்கள்.

யாஹ்யகான் அரசாங்கம் கிழக்குப் பாகிஸ்தானில் விரைவில் மக்கள் ஆட்சியை ஏற்படுத்தவேண்டும் என்றே பிரிட்டன் விரும்புகிறது என்று வெளி உறவு அமைச்சர் சேர் அலெஸ் டக்ளஸ் ஹியூம் கூறினார்.

மக்கள் ஆட்சி என்ற பெயரில் வெறும் கைக்கூலிகளின் அரசாங்கம் ஏற்படுத்தப்படுவதினால் பயன் ஏற்படப்போவதில்லை யென்று எதிர்க்கட்சியினர் கூறினார்கள்.

கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்குப் பொதுமன்னிப்பு அளிப்பதாக யாஹ்யாகான் அரசு அறிவித்திருப்பதைக் குறிப்பிட்டு 'இது என்ன பொது மன்னிப்பு' என்று தொழிற்கட்சினர் கேட்டனர்.

#### காலரா நிலைமை

இந்தியாவுக்குள் வந்துள்ள கிழக்குப்பாகிஸ்தான் அகதிகள் மத்தியில்தோன்றியுள்ள காலரா தொற்று நோய் இப்பொழுது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பொழுது அகதிமுகாம்களில் சுமார் 19 ஆயிரம் பேர் காலரா நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சுமார் 2600 பேர் இந் நோய்க்கு இதுவரை பலியாகியுள்ளனர். ஆரோக்கியமாகவுள்ள அகதிகள் மாத்திரமே வெளி இடங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர் அகதிகள் இருக்கும் பகுதியின் சுமார் 5 மைல் சுற்றுவட்டத்திலுள்ள அனைவருக்கும் தடுப்பூசி போடப்படுகிறது.

அகதிகள் மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுவதால் காலரா போன்ற நோய்கள் பிற மாநிலங்களுக்கும் பரவவிடாமல் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

---

## பிரிட்டிஷ் தொண்டர் படை

### இளைஞர்களின் பணி

லண்டன், ஜூன் 11

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு விஜயம் செய்து அவ்வவ் நாட்டு மக்களுடன் சமமாக வாழ்ந்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், ஏதாவது ஒரு தொழிலை அவர்களுக்குப் பயிற்றவும் பிரிட்டிஷ் தொண்டர் படையினர் வருடா வருடம் அங்கத்தினர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பியருந்தொண்டாற்றி வருகின்றனர்.

பிறநாடுகளுக்குச் சென்று அம் மக்களுடன் வாழ்ந்து, மீண்டும் தம் தாயகமான பிரிட்டனுக்குத் திரும்பும் இளைஞர்களால், இன்று பிரிட்டனும் பயனுற்று வருகிறது. வெளிநாட்டு மாணவரை வரவேற்பது, அவர்கள் பிரிட்டனில் மகிழ்ச்சியுடன் தங்க உதவி செய்வது பல இன சமூகத்தினரிடையே சுமுகமான உறவு கொள்ள உதவுவது, குடியேற்ற வாசிகளுக்கு ஆங்கில மொழியைப் பயிற்றுவது போன்ற மிக முக்கியமான செயல்களை இவ்வனுபவமிக்க தொண்டர் படையினர் இன்று பிரிட்டனில் செய்து வருகின்றனர்.

வெளிநாட்டு தொண்டர் உதவிச் சபையானது ஒவ்வொரு வருடமும் தனது தொண்டர் பணிபுரியும் நாட்டு இளம் மக்களின் அத்தியாவசிய கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலேயே தற்போது அதிக நாட்டம் கொண்டுள்ளது. சென்ற வருடம் இச்சபை பாடசாலைகளுக்கு அவசியமான விஞ்ஞான சாதனங்களை இலவசமாக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தது குறிப்பிடத்தக்கது.

---

தடையை மீறிய

## இந்திய எம். பி. கைது

புதுடில்லி, ஜூன் 11

வங்காளதேசத்தை அங்கீகரிக்கும்படி வற்புறுத்தி சோஷலிஸ்ட் கட்சியினர் டெல்லியில் ஊர்வலம் நடத்திச்சென்றபோது, தடையை மீறி பாராளுமன்ற கட்டிடத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றதற்காக டெல்லி மேல்சபை சோஷலிஸ்ட் அங்கத்தவர் திரு. ராஜ்நாராயன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பாராளுமன்றத்தை, சுற்றி தடை உத்தரவு அமுலில் இருப்பதால், கலைந்துபோகும்படி ஊர்வலத்தினரை பொலிஸார் கேட்டுக்கொண்டும், அவர்கள் தடையை மீறியதால் திரு. நாராயன், பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிதா. ராம்சிங் உட்பட 69 சோஷலிஸ்டுகள் கைதுசெய்யப்பட்டனர்.

---

## திருப்பதி கோயிலில் எம். ஆர். ராதா

திருமலை. ஜூன். 11

நெற்றியில் விபூதியுடன் நடிகர் எம். ஆர். ராதா குடும்பத்துடன் கோயிலுக்கு வந்து ஏகாந்த சேவையில் ஸ்ரீவேங்கடேசப் பெருமாளை தரிசித்து லட்டு பிரசாதம் பழம் பெற்று சாப்பிட்டு வணக்கம் என்று கோயில் அர்ச்சகர் முசரிப்பாகம் கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரிடம் தெரிவித்ததாக அர்ச்சகர் நிருபரிடம் கூறினார். யாத்ரீகர்களும், கோயில் சிப்பந்திகளும் உள்ளூர் வாசிகளும் ராதாவை நன்றாக சூழ்ந்து கொண்டனராம்.

---

# சீனவுடனான வர்த்தகத்தடைக்கு அமெரிக்காவில் முற்றுப்புள்ளி

நியூயோர்க், ஜூன் 11

செஞ்சீனவுடனான வர்த்தகத்துக்கு இருந்து வந்த தடைகளை அமெரிக்க அதிபர் முற்றாக ஒழி முடிவுக்கு கொண்டுவந்துள்ளார்

செஞ்சீனவுடன் அமெரிக்காவுக்கிருந்து வந்த வர்த்தகத்தொடர்புகள் 1949-ம் ஆண்டு துண்டிக்கப்பட்டது. அந்த நாட்டுடனான உறவுகளைப் பலப்படுத்திக்கொள்வதற்காக அதிபர் இப்பொழுது இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார்.

சுமார் 140 பொருள் வகைகளை செஞ்சீனவுக்கு ஏற்றுமதி செய்யவும் அங்கிருந்து பொருட்களை இறக்குமதி செய்யவும் அமெரிக்க வர்த்தகர்களுக்கு இப்பொழுது வசதிகிடைத்திருக்கின்றது.

இலக்ட்ரோனிக் பொருட்கள் உட்பட உலோகங்களைகள் இரசாயனப் பொருட்களையும் செஞ்சீனவுக்கு ஏற்றுமதி செய்யமுடியும்.

பாக். கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கு இருந்து வந்தத் தடையையும் அதிபர் விலக்கியிருக்கிறார்.

---

கி. சபைக்கு

## வரியிறுப்பாளர் யோசனை

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் கிராம சபை, பொது வீதிகளிலுள்ள பனை, புளி, மா போன்ற பயன்தரும்மரங்கள்மூலம் கிடைக்கும் வருமானத்தைச் சேகரிப்பதன் மூலம் சபையின் வருமானத்தை மேலும் அதிகரிக்கலாம் என்று சுழிபுரம் கிராம சபை வரியிறுப்பாளர்கள் கிராம சபைத் தலைவருக்கு மகஜர் மூலம் தெரிவித்துள்ளனர்.

---

## இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து

சென்னை, ஜூன் 11

இந்திய அரசு இந்தி மொழியை நாடெங்கும் அரசகரும மொழியாக்க வேண்டும் எனத் தீவிர விருப்புகொண்டுள்ளது. இது இந்தியாவின் ஒருமைப்பாட்டையும் அதன் கலாச்சாரத்தையும் அழித்துவிடும்.

பேராசிரியர் டாக்டர் குமார் சட்டர்ஜி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். திராவிட மொழியியலாளரின் முதலாவது அகில இந்திய மகாநாட்டுக்குத் தலைமைவகித்துப் பேசுகையிலேயே பேராசிரியர் சட்டர்ஜி மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

# திரிசங்கு சொர்க்கத்தில் தனியார்துறை!

"மிக மோசமான" நிலையில் இருப்பதாக பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவினாலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இலங்கையின் பொருளாதாரம் மேலும் மோசமாகக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருட ஆரம்பத்தில் இலங்கைக்கு வந்த உலக வங்கி நிபுணர்கள் குழுவொன்று இந்த முடிவுக்கு வந்துள்ளது. தனியார்துறையினரின் முதலீடு பெருமளவில் குறைந்துவருவதால் தான், இலங்கையின் பொருளாதாரம் மேலும் மோசமடையப் போகிறது என்று இந்தப் பொருளாதார நிபுணர்கள் அடங்கிய உலக வங்கிக்குழு தீர்மானித்திருக்கிறது.

சென்ற ஆண்டில்தனியார் துறை முதலீடு 25 சத விகிதம் வீழ்ச்சியடைந்திருப்பதாக கணித்துள்ள இந்தக் குழு, இந்த ஆண்டில் அரசாங்கம் கடைப்பிடித்து வரும் கைத்தொழில்கள் சம்பந்தப்பட்ட கொள்கையின் காரணமாக தனியார் துறை முதலீடுமேலும் வீழ்ச்சியடையுமென்று எதிர்பார்க்கின்றது.

அரசாங்கம் வகுத்துள்ள தேசியப்பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின்படி, இந்த ஆண்டு தனியார் துறை முதலீடு 12 கோடியே 40 லட்சம் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் நிறைவேறாத இலக்கிலிருந்தும் இது 10 சதவிகிதம் குறைவான தொகைதான் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

அரசாங்கம் எதிர்பார்க்கும் இந்தப்பெரும் தொகையைப்பற்றி உலகவங்கி நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது

"உள்நாட்டு உற்பத்திப் பெருக்கத்துக்கும், வேலைவாய்ப்பு வசதிக்கும், தேவையென்று கருதப்படும் மிகக் குறைந்த தொகை என்ற அடிப்படையிலேயே இந்தத் தொகை கணிக்கப்பட்டுள்ளது ஆனால் இன்றைய நிலையில் இந்த இலக்கை அடைவது முடியாது என்றுதான் கருதவேண்டியிருக்கிறது"

தனியார்துறை முதலீடு செய்வதற்குத் தடைக்கற்களாக விளங்கும் அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளையும் உலக வங்கி நிபுணர்கள் குழு அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. பெரும்வாதப் பிரதிவாதங்களுக்கு ஆளாகியிருக்கும் தொழில் நிறுவனங்கள் சுவீகரிப்பு மசோதா முக்கியமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆட்சிமன்றத்தினால் இரண்டுமுறை நிறைவேற்றப்பட்டு, செனட்சபையினால் இன்னமும் நிறைவேற்றப்படாமலிருக்கும்தொழில் நிறுவனங்கள் சுவீகரிப்பு மசோதாவின் மூலமாக அரசாங்கம் தேவையெனக் கருதும் எந்தத் தொழிலையும் சுவீகரிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இம்மசோதா ஆட்சிமன்றத்திலே விவாதிக்கப்பட்ட போது, எதிர்க்கட்சித் தலைவர் திரு ஜே.ஆர். ஜெயவர்தன உட்பட எதிர்க்கட்சிப் பேச்சாளர்கள் பலர், "இனி தனியார் துறையினர் எந்தத் தொழிலிலும் முதலீடு செய்யமாட்டார்கள்; எந்த நேரமும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்ற பயம் இருக்கையில் எப்படி தனியார் துறையினர் தொழில்களில் பணம் முதலீடுசெய்ய முன்வருவார்கள்" என்ற தொனியில் கருத்து தெரிவித்தனர்.

நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா உட்பட பல அரசாங்க தரப்பு அமைச்சர்களும், எம். பீக்களும், 'தேசிய நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழில் நிறுவனங்களுக்கும் தொழில் அதிபர்களுக்கும் எதிராக மட்டுமே இந்த விசேட அதிகாரங்கள் பயன்படுத்தப்படும் என்று வலிந்து வாக்குறுதியளித்தனர்.

ஆனால் இந்த வாக்குறுதிகள் எல்லாம் தனியார் துறையினரைத் திருப்திப்படுத்தவில்லை என்பதை செனட்டிலும்பத்திரிகைகளிலும், தனியார் துறை சார்பினர்தெரிவித்துள்ளகருத்துகளில் இருந்து அறியமுடிகிறது. எந்தத் தொழில் நிறுவனத்தையும் அரசாங்கம் சுவீகரித்துக் கொண்டால் அதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியாதபடி சட்டம் உருவாக்கப்பட்டதே தனியார் துறையினரின் அதிருப்திக்கு முழுமுதற் காரணமாகும்.

ஆட்சிமன்றத்தின் சென்ற கூட்டத் தொடரின்போது தொழில் நிறுவனங்கள் சுவீகரிப்புமசோதா மீதான விவாதத்தை செனட்சபை முடிக்குமுன்னரே மார்ச் மாதம் ஆட்சிமன்றக் கூட்டத்தொடர் கலைக்கப்பட்டது புதிய கூட்டத்தொடரில் ஆட்சிமன்றத்தினால் இரண்டாவது முறையாக நிறைவேற்றப்பட்டு, செனட்சபைக்கு அனுப்பப்பட்டுள்ள தொழில் நிறுவனங்கள் சுவீகரிப்பு மசோதாவை செனட்சபை நிறைவேற்றினாலும் நிறைவேற்றாவிட்டாலும் மோதல்களுக்குள் சட்டமாக்க அரசியலமைப்பு சட்ட விதி இடமளிக்கிறது

தனியார்துறை முதலீடு செய்ய முட்டுக்கட்டையாக விளங்கும் நடவடிக்கைகளில் சிலவாக, மூலதன வரி, மூலப்பொருட்களுக்கான 'கோட்டா' குறைப்பு, கடுமையான தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்கள், ஆகியவற்றைக் குறிப்பிட்டு இவற்றின் கூட்டுமொத்த விளைவு தனியார்துறையினரின் அதிருப்தி என்று கருத்து தெரிவித்துள்ளது உலகவங்கி நிபுணர் குழு.

- வெரி. சுந்தரலிங்கம் -

தனியார்துறை முதலீடு செய்யப் பின்வாங்கும் அதே வேளையில் பொதுத்துறை விஸ்தரிப்பு துரிதமாக நடைபெறுகிறது எனவும் உலக வங்கி அறிக்கை கூறுகிறது. தனியார் துறையினரின் ஏகபோகமாக இருந்த துறைகளில் கூட, பொதுத்துறை எழுந்துவிட்டதாக அறிக்கை கூறுகிறது.

"தேசிய அபிவிருத்தியில் தனியார் துறையினரும் தக்க பங்கு கொள்ளவேண்டுமானால் தனியார்துறையினர் பற்றிய அரசாங்கத்தின் போக்கில் கணிசமான மாற்றம் ஏற்படவேண்டும்" என தேசிய கைத்தொழில் அதிபர்கள் சம்மேளனம் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருப்பதை உலக வங்கி நிபுணர்கள் குழுவின் இந்த அறிக்கை மேலும் வலியுறுத்துகின்றது.

வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது கடந்த 23 வருட காலமாக தனியார் துறையினரின் கைகளில் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தைப் பெரும்பாலும் ஒப்படைத்திருந்தும் எந்த விதமான கணிசமான முன்னேற்றமும் அடையவில்லை. வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டமும், பெருகி வரும் பொருளாதாரப் பிரச்னைகளும் இந்த தோல்வியைத் தக்கபடி எடுத்துக் காட்டுகின்றன. எனவே இனியும் தொடர்ந்து தனியார்துறையை எதிர்பார்க்காமல் எதிர்காலத்தில் பொதுத்துறையின் விஸ்தரிப்புக்குத் திட்டம் தீட்டப்படும் என்று தெரிவித்தார்.

அண்மைக்காலத்தில் குறிப்பாக ஜனதா விமுக்தி பெரமுனவின் கிளர்ச்சிக்குப் பின்னர் பொருளாதாரத்தில் பெரும் விரிசல் ஏற்பட்டதன் விளைவாக தனியார் துறையினரின் ஒத்துழைப்பை ஒன்றுக்கும் மேற்பட்ட அமைச்சர் கோரியிருந்தனர்.

ஆனால் இரண்டொரு வாரங்களுக்கு முன்னர் சில கனிப்பொருள் சுரங்கக் கம்பெனிகளை அவசரகாலச் சட்டத்தின் அதிகாரத்தைக் கொண்டு அரசாங்கம் சுவீகரித்திருப்பதால் தனியார் துறையினரின் சந்தேகமும் அதிருப்தியும் மேலும் வலுவடைந்திருக்கிறது.

"இந்தச் சூழ்நிலையில் அரசாங்கத்தை நாங்கள் எப்படி நம்ப முடியும்?" என்று தொழில் அதிபர் ஒருவர் கேட்டதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி தனியார்துறையினரின் இன்றைய மனப்போக்கை நன்கு பிரதிபலிக்கிறது.

---

ஜப்பானிலிருந்து

## 'சாந்தாக்கா' வருகை

அம்பன், வெள்ளி

ஜப்பானிலிருந்து 'செஞ்சுடர் சாந்தாக்கா' என்னும் புதிய இன மிளகாயை வடபகுதி விவசாய அதிபர் திரு பொ மாணிக்கவாசகர் வரவழைத்துள்ளார். இவ்வின மிளகாய்ச் செடியின் அறுவடைக்காலம் 3 மாதமாகும் 1/4 ஏக்கர் தரையில் இவ்வின மிளகாயை உற்பத்தி செய்தால் வருமானமாக ரூபா 1500 பெறலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வின மிளகாய் வடபகுதிக்கு மிகவும் செழிப்புற்று வளரக் கூடியதென குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்பன் பகுதி விவசாய விரிவாக்க சேவையாளர் திரு. ஏ. வேலுப்பிள்ளையினால் இம்மிளகாய்ச் செய்கை அம்பனில் பரீட்சார்த்தமாக நடத்தப்பட்டு வருகின்றது.

# அஷ்டதிக்கு!

தென்பிரான்ஸிலே ஒரு சிறு கிராமத்தின் மேயர் ரீனி ஆவரே என்பவர் ஒரு துப்பாக்கியால் தன்னைத் தாமே சுட்டுக்கொண்டு மாண்டார். ஏன் தெரியுமா? அங்கு பலகாலமாக பூட்டிக்கிடந்த ஒரு மண்டபத்தில் விவாகவரவேற்பு நடத்தவேண்டுமென்று பெண் வீட்டார் கேட்டுக்கொண்டதற்கு அந்த மேயர் அனுமதியளித்தார். சுமார் 70 பேர் அந்த மண்டபத்தில் நுழைந்ததும் கீழே இத்துப் போயிருந்த பலகை முறிந்தது. விருந்தினரில் 13 பேர் கீழே இருந்த ஆழமான ஒரு பாழுங்கிணற்றில் விழுந்து இறந்துவிட்டனர். இவ் விபத்துக்கு மேயர்தான் காரணமென்று பலரும் புகார் கூறியதும் இருபது வருட காலமாக மேயராக இருந்த அவர் மனமிடிந்து தற்கொலை செய்துகொண்டு விட்டார். மேயர் பதவி ரோஜாப்பூ மெத்தையல்ல.

0 0 0

### அரசும் கல்வியும்

தமிழ்மூலம் பி ஏ., பி. எஸ் ஸி. வகுப்புகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு வருடமொன்றுக்கு 180 ரூபாய் உதவிப்பணம் அளிப்பதென்றும் பி. யு ஸி. வகுப்புகளில் தமிழ்மூலம் கல்விபயிலும் மாணவருக்கு தலா ரூபா 50 புத்தகத்துக்காகக் கொடுப்பதென்றும் தமிழக அரசு அறிவித்துள்ளது.

பி. யு. ஸி. (பல்கலைக்கழக புகுமுக வகுப்பு) படிக்கும் மொத்தம் 70 ஆயிரம்மாணவரில் 20 ஆயிரத்துக்கு மேலும் பி ஏ, பி எஸ் ஸி வகுப்புகளில் மொத்தம் 33 ஆயிரம் மாணவரில் 6309 பேரும் தமிழ்மூலம் கல்விபயில்கின்றார்கள். ஆங்கில மூலமும் தொடர்ந்து கல்விபோதனை எல்லாக் கல்லூரிகளிலும் அளிக்கப்பெறும் கட்டாயம் எதுவும் இல்லை. போதனாமொழிப் பிரச்னையை தமிழக அரசு இவ்விதம் சுமுகமாகத் தீர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

0 0 0

### உண்ணாவிரதம்

புதுடில்லியில் பார்லிமெண்ட் கட்டடத்துக்கு முன்பாக ஆத்மா ராம் பாண்பாட் என்பவர் 21 நாள் உண்ணாவிரதமிருந்து வருகிறார். மதுபானம் அதிகரித்துவிட்டதென்றும், உடனடியாக மதுவிலக்கை அமுலுக்குக்கொண்டு வரவேண்டுமென்றும் கூறி இவ்விஷயமாக மக்களின் கவனத்தைத் திருப்பவே அவர் உண்ணாவிரதமிருக்கிறார்.

பௌத்த நாடான இலங்கையில் மதுபானம் வரவர அதிகரித்துவருகிறது பூரண மதுவிலக்கு வேண்டுமென்று இங்கு கேட்பாரில்லை. ரயில்களில் மதுபான விற்பனையைத் தடைசெய்யப்போவதாகக் கூறப்பட்டது. ஆனால் மதுபான விற்பனை ரயிலில் அதிகரித்துவருகிறதேயன்றி குறையும் வழியைக் காணோம்.

0 0 0

### தெய்வீக யானை

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சதுரகிரி மலைக்கு மேலுள்ள சுந்தர மகாலிங்க ஆலயத்தில்வழிபட்டு வந்த ஓர் தெய்வீக யானை சென்ற ஜூலைமாதம் அக்கோயில் மூலஸ்தானத்து அடியில் விழுந்து உயிர் நீத்தது. ஆறு அடி நீளமுள்ள ஒற்றைக்கொம்புள்ள அந்த யானை மற்றயானைகளுடன் சேராமல் அக்கோயிலில் தனியாக வந்து வழிபடும். இரவில் அங்கேயே படுத்திருக்கும், மனிதரைக் கண்டால் காட்டுக்குள் அமைதியாகச் சென்றுவிடும். யாரையும் தொந்தரவுசெய்யாது. சந்நிதியில் தலையைக் கீழே வைத்து வணங்கும். மூலஸ்தானத்தை அது பாதுகாத்துவந்தது.

சென்றவருடம் அந்த யானை இறந்ததும் காட்டு இலாகாவினர் அதை அடக்கம் செய்து அதன் தந்தத்தைத் தனியே எடுத்து வைத்திருந்தனர். பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க சுமார் இரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள அந்தத் தந்தத்தை அக்கோயிலுக்கே அளிக்க தமிழக அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது. திருவானைக்காவலில் யானை சிவலிங்கப் பெருமானை வழிபட்டு மோட்சமடைந்ததாகப் புராணம்கூறும். இக்காலத்திலும்கூட அவ்விதம் நடக்கிறதென்பதற்கு இது ஓர் அத்தாட்சி. சில மாதங்களுக்கு முன் சீர்காழியிலும் கோயில் யானை இவ்விதமே வழிபட்டிறந்தது குறிப்பிடத்தக்கது.

0 0 0

சனிப் பெயர்ச்சியை முன்னிட்டுக் காரைக்காலுக்குப் பக்கத்திலுள்ள திருநள்ளாறுக் கோயிலில் சனிபகவானுக்கு விசேஷ பூசைகள் நடந்தன. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து நளதீர்த்தத்தில் எண்ணெயாடி, சனிபகவான் தரிசனம் செய்தனர். புதுச்சேரி கவர்னர் ஸ்ரீ ஜெட்டி இதற்கான ஏற்பாடுகளைப் பார்வையிட்டு, அவரும் பக்தியுடன் தரிசித்தார். மைசூரைச் சேர்ந்த லிங்கதாரியான ஸ்ரீ ஜெட்டி ஒரு வீரசைவர். திருவையாறு கோயில் கும்பாபிஷேகத்தின்போது, சைவத்தைப் பற்றியும் சிவலிங்க தத்துவத்தைக் குறித்தும் ஓர் அரிய பிரசங்கம் செய்தார். செட்டி என்ற சொல்தான் 'ஜெட்டி'யாக மாறியுள்ளது இதுவே 'சிட்டர்' என்றும் வழங்கப்படுகிறது.

0 0 0

### பொது லிபி

இந்தியாவிலுள்ள பல மொழிகளுக்கும் ஒரு பொதுவான 'லிபி'யை எழுத்தாளர்கள் கூடிக் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஆந்திரக் கவர்னர் கந்துபாய் தேசாய் கேட்டுக்கொண்டார்.

ராமாயணம், மகாபாரதம், கீதை இவற்றைப் பரப்புவதன் மூலம் தேசியப் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் காக்கவேண்டுமென்றார் அவர். பிரதேச மொழிகள் மூலமே கல்விப் போதனை நடப்பது நல்லதென்றும், இன்றேல் அந்நிய மொழியைக் கற்பதிலேயே பாதி நேரம் வீணாகிவிடலாமென்றும் கூறினார்.

நாட்டை, அரசியல், பொருளாதாரம், ஆன்மீகம் முதலிய துறைகளில் பலப்படுத்த மொழிச் சக்தியை எழுத்தாளர்கள் பயன்படுத்தவேண்டுமென்றும், தெலுங்கு எழுத்தாளர் மகாநாட்டில் அவர் கேட்டுக்கொண்டார்.

மோரிஷ், தென்னாபிரிக்கா, மலேஷியா, பிஜி, கம்போடியா, டிரினிடாட் முதலிய நாடுகளில் தெலுங்கு பேசும் மக்கள் ஏராளமாகக் குடியேறியிருப்பதாகவும் அந்நாடுகளுக்கு ஒரு கலாசாரத் தூதகோஷ்டியை அனுப்பிவைக்கவேண்டுமென்றும் அகில இலங்கை தெலுங்கு எழுத்தாளர் மகாநாடு ஆந்திர அரசைக் கேட்டுக்கொண்டது

1974ம் வருஷத்துக்குள் அகில உலகத் தெலுங்கு மகாநாட்டை நடத்தவேண்டுமென்றும் ஆந்திர அரசாங்கத்தை அம்மகாநாடு கேட்டுக்கொண்டது. இதற்கான பூர்வாங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடத்தியுள்ளதைப் பின்பற்றியே இந்த முயற்சி நடக்கின்றது.

# 'தொழிற்கல்வி முக்கிய இடம்பெறவேண்டும்'

மாவிட்டபுரம், வெள்ளி

ஒரு மாணவன் பாடசாலைப் படிப்பு முடிந்ததும் ஒரு தொழிலைப்பெறும்வகையில் கல்வித்திட்டம் அமைய வேண்டும். இன்றைய கல்வித்திட்டத்தில் தொழிற்கல்வி முக்கிய இடம்பெற வேண்டும்.

வடபகுதிப்பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வியை அபிவிருத்தி செய்வது பற்றி ஆராயுமுகமாக யாழ்ப்பாணம் வந்துள்ள கல்வி இலாகாவின் விஞ்ஞான, கணிதத்துறைப் பொறுப்பதிகாரி திரு. எஸ். குணரத்தின விஞ்ஞான ஆசிரியர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

யாழ். மாவட்டப் பாடசாலை விஞ்ஞான ஆசிரியர்களுக்குப் போதனை அளிக்கும் ஆசிரியர்களின் விசேஷ கூட்டத்தை அவர் கூட்டினார். யாழ். கல்வி அலுவலகத்தில் வடபகுதிவித்தியாதிபதி திரு. எஸ். மகாதந்திலை தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு குணரத்ன மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'இன்றைய மாணவன் பாடசாலையில் படித்து முடிந்தபின் என்ன செய்வது என்று தெரியாது திகைக்கிறான். இந்நிலை நீடித்தால் பிரச்னை பெருகுமேதவிர தொழில்துறை வளரமாட்டாது. மாணவன் பாடசாலையை விட்டதும் ஒரு தொழிலை ஆரம்பிக்கக்கூடிய தான கல்வியை போதித்தால்தான் அவன் நன்மையடைவான். இதன்மூலம் சமுதாயம் சீர்பெறும்.

இத் திட்டத்தினால் ஒரு மனிதன் மட்டும்பயன் அடையாமல் நாட்டின் சகல மக்களும் பயன் பெறுவர்வேலையில்லாப்பிரச்னை உட்பட பல பிரச்னைகளும் நீங்க வழிபிறக்கும். முதலில் இன்று பெரும் பிரச்னையாக விளங்கும் பொருளாதாரப் பிரச்னை தீர இது ஒரு சிறந்தவழி

வடமாகாண விஞ்ஞானக் கல்வி ஆலோசகர் திரு. எஸ் அற்புதநாதனின் சேவையை திரு குணரத்தின மிகவும் பாராட்டினார்

# எல்லாக் கட்சிகளிலும் நண்பர்கள் உண்டு

## எம். ஆர். ராதா கூறுகிறார்

சென்னை, ஜூன் 11

ராதா சிறைசென்று வருகிறாரே எப்படி வருவார் என்று சில பேரா நினைக்கிறார்கள். ராதா எப்படி வருவான். அடாத மழை பெய்தாலும் ஓயாது வெய்யில் காய்ந்தாலும் ரோஜா மலர் மலர் மாறாது மணமும் மாறாது. அதுபோல ராதா என்றும் ரசதாவாகத்தான் இருப்பான்'' இவ்வாறு நடிகர் எம். ஆர். ராதா கூறினார்.

சைதாப்பேட்டையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் ராதா பேசினார்.

அவர் மேலும் கூறியதாவது!

நான் சிறையில் இருந்தபோது தேர்தல்பற்றிய முடிவுகளைக்கவனித்தேன் இங்கே பல தலைவர்கள் தோற்றார்கள். இதை பார்க்கும்போது [illegible] எங்கே போகிறார்கள். இந்தப்போக்கு என்ன [illegible]தாரம் எடுக்கப்போகிறது என்பதை நான் அறியேன்.

இந்தப் போக்குகளை உணர்ந்து எதையும் தாங்கும் தலைவரின் பின்னால் மக்கள்நிற்க வேண்டும். அப்படிப்பட்ட தலைவர் காமராஜ் என்பதை மக்கள் உணரவேண்டும்.

இங்கே காமராஜ் பின்னால் நான் வரவேண்டுமென்று கூறினார்கள். நான் பின்னால் வரவில்லை. காமராஜின் அணியின் முன்னால் நிற்கத் தயார்.

நான் எந்தக் கட்சியிலும் சேர்ந்து கொள்வது என் பழக்கமல்ல. எல்லாமக்களும் இன்பமாக வாழவேண்டும் என்பதற்காக நான் பாடுபடுபவன், காமராஜும் அதற்காகப் பாடுபடுகிறார். எல்லாக்கட்சியிலும் எனக்கு நண்பர்கள் உண்டு. எல்லா கட்சித் தலைவர்களும் எனக்கு நண்பர்கள்தான்.

தி. மு. கழக கட்டடங்கள் கட்டநிதி கொடுத்திருக்கிறேன். கம்யூனிஸ்டு கட்சி தோழர்களுக்கும் நான் நிதி கொடுத்திருக்கிறேன் மற்றும் தி. க. பிரகட்சித் தோழர்கள் நண்பர்களுக்கும் நிதி கொடுத்திருக்கிறேன். நான் விளம்பரப்படுத்திக் கொள்ள விரும்புவதில்லை. அது எனக்குப் பிடிக்காது என்றார்.

# புதிய ஜே.பி.க்கு பாராட்டு

யாழ்ப்பாணம், சனி

திரு. வல்லிபுரம் பொன்னுத்துரை சமாதான நீதவானாக நியமனம் பெற்றதை முன்னிட்டு யாழ். ஜி. பி. எஸ் தொழிலாளர் கூட்டுறவுத் தொழிற் சங்கத்தினரால் பாராட்டுவிழா ஒன்று நடாத்தப்பட்டது.

இவ்விழாவிற்குத் தலைமை வகித்த திரு. சு. இல்லையம்பலம் பேசுகையில் திரு. பொன்னுத்துரை தனது உழைப்பாலும், திறமையாலும் முன்னேறி பிறரையும் முன்னேற்றினார் என்று குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினராக ஆட்சிமன்ற உறுப்பினர் ஜனாப் ஏ. அசீஸ், எம். சி. சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர். யாழ். மா. கூ. து. சே. சமாசத் தலைவர் திரு ஜே. எவ் சிங்மறிங்கமும் இப் பாராட்டுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

விழாவின் இறுதியில் வாழ்த்துப்பாவுடன் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டது

சுகாதார அமைச்சின்

# பாதுகாப்பு நடவடிக்கை

கோட்டை, வெள்ளி

காலரா நோய் நாட்டில் பரவாமல் இருப்பதற்கான சகல பாதுகாப்பு நடவடிக்கைகளையும் சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

அயல்நாடான இந்தியாவின் சில பகுதிகளில் காலரா நோய் தீவிரமாகப் பரவியதையடுத்தே அந் நோய் இங்கும் பரவாது இருப்பதற்காக மேற்படி நடவடிக்கையை சுகாதார அமைச்சு எடுத்துள்ளது.

காலரா நோயைத் தடுப்பதற்கான மருந்துவகைகள் யாவும் கையிருப்பில் இருப்பதாகவும் இந்தியாவில் இருந்துவருபவர்கள் கடும் பரிசோதனையின் பின்னரே நாட்டுக்குள் அனுமதிக்கப்படுவதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

குறிப்பாக வடபகுதியில் இந்நோய் பரவக் கூடுமாதலால் அங்குள்ள மருத்துவ நிலையங்கள் கவனமாக இருக்கவேண்டுமெனவும் அமைச்சு எச்சரித்துள்ளது.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

பாசையூர் உற்சவம்

# இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், சனி

இம்மாதம் 1-ம் திகதி கொடியேற்றத் துடன் ஆரம்பமாகிய யாழ். பாசையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை முடிவடையும். இன்று தேவநற்கருணைச் சுற்றுலாவும் நாளை காலை திருநாட் பூசையும் யாழ் துணை ஆயர் அதிவண எல் ஆர் அன்ரனி ஆண்டகையினால் ஒப்புக் கொடுக்கப்படும். அன்று மாலை வழமைபோல் தேர்த் திருவிழா நடைபெறும். பக்தர்களின் வசதியை முன்னிட்டு விசேஷ பஸ்சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. விழா நிகழ்ச்சிகளை வண விஸ்வரசிங்கம் அடிகள் நிர்வகித்துவருகின்றார்.

## ஊறணியில்

மாவிட்டபுரம் வெள்ளி

ஊறணி புனித அந்தோனியார் கோவில் உற்சவம் இம்மாதம் 13-ம் திகதியுடன் முடிவடைகிறது. அன்று காலை திருநாள் பாடற்பூசையும் மாலையில் ஊறணி புனித அந்தோனியார் இளைஞர் கழகத்தினரின் 'இறிவித சாந்த மரிய தாரியா' என்னும் நாட்டுக் கூத்தும் இடம்பெறும்.

12-ம் திகதி மாலை திருச்சொரூப சுற்றுலாவும், திவ்விய நற்கருணை பவனியும், வேஸ்பரும் நடைபெறும், யாத்திரிகர்களின் வசதியை முன்னிட்டு விசேஷ பஸ் சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

......

# நோயாளர் அவதி

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் கிராம சபை ஆயுள்வேத வைத்தியசாலையில் போதிய மருந்து வகைகள் இல்லாததால் நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர் கொழும்பு ஆயுள்வேத வைத்திய நிலையத்திலிருந்து மருந்துகள் கொள்வனவு செய்யவேண்டும் என்ற கட்டுப்பாட்டினாலே தான் மருந்துகள் வந்து சேர்வதில் பெரும் தாமதம் ஏற்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. மாதம் இரண்டாகியும் அனுப்பப்பண்ணிய மருந்து வகைகள் இதுவரை வந்து சேரவில்லையென கிராம சபைத் தலைவர் ஆணையாளருக்கு முறையிட்டுள்ளார்.

—

# அடுத்தவாரம் கொண்டாடுவாராம்

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலை கோணேநகர்த் தமிழணி இயக்கத்தின் இரண்டாண்டு பூர்த்தி விழாவை அடுத்தமாத நடுப்பகுதியில் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. திருமலையின் பழம்பெரும் கலைஞர்கள் இவ்வாண்டு விழாவில் கௌரவிக்கப்படுவராம்.

# இளம் விவசாயிகள் கழகங்கள்

அம்பன், வெள்ளி

இலங்கையிலுள்ள 1800 கிராமங்களில் மொத்தமாக 3000 இளம் விவசாயிகள் கழகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. யாழ் மாவட்டத்திலுள்ள 279 கிராமங்களில் மொத்தமாக 102 கழகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் வடமராட்சியில் 20 பதிவு செய்யப்பட்ட கழகங்கள் இருக்கின்றன. யாழ். மாவட்டத்தில் வடமராட்சியிலேயே கூடிய இளம் விவசாயிகள் கழகங்கள் உள்ளன.

# மின்சாரக் கட்டண அதிகரிப்பு நிறுத்தப்பட்டது

## யாழ் முதல்வர் அறிவிப்பு

குருநகர், வெள்ளி

யாழ். மாநகர வரியிறுப்பாளரிடமிருந்து மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க கடந்த மாநகரசபை நிர்வாகம் எடுத்துவந்த நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பா தெரிவித்தார்,

ஏழை வரியிறுப்பாளர்களின் கஷ்டங்களை நீக்குமுகமாகவே இந்த நடவடிக்கையை எடுத்து வருவதாகவும் மேயர் தெரிவித்தார், தனிப்பட்ட வரியிறுப்பாளர்களுக்கும் வியாபார ரீதியில் இயங்கும் வரியிறுப்பாளர்களுக்கும் ஒரே நிலையில் கட்டணத்தை உயர்த்துவதால் கஷ்டப்படும்வறிய வரியிறுப்பாளர் மேலும்கஷ்டமடையநேரிடுகின்றது இக் கஷ்டங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காகவே இந்த வரிகட்டும் திட்டத்தை மேயர் நிறுத்தியுள்ளதாக தெரிவித்தார்,

# திருக்கேதீச்சர பாலஸ்தாபன வைபவமும் திருப்பணியும்

திருக்கேதீச்சரம், வெள்ளி

இலங்கையில் பாடல் பெற்ற ஸ்தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி வேலைகள் ஜூன் மாதம் 6-ந் திகதி ஒரு புதிய திருப்பத்தை கொடுத்துள்ளன அன்றையதினம் திருக்கேதீஸ்வரநாதனுக்கும், கௌரி அம்பாளுக்கும் புதிதாக அமைக்கப்பெற்ற திருக்கேதீஸ்வர ஆலய சபாமண்டபத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பால ஆலயங்களுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

பாலஸ்தாபன கிரியைகளுக்கு நயினாதீவு. ஐ. கைலாசநாதக்குருக்கள் தலைமை தாங்கினார். அவருக்கு உதவியாக இன்னும் நான்கு சிவாசாரியார்கள் இருந்தனர். பாலஸ்தாபனம் சம்பந்தமான நிகழ்ச்சிகள் ஜூன் மாதம் 3-ந் திகதி ஆரம்பமாகி ஜூன் 6ந் திகதி முடிவுற்றன

இந்த பாலஸ்தாபன கும்பாபிஷேக கிரியைகளைத் தரிசிப்பதற்காக இப்போதுள்ள நெருக்கடியையும், போக்குவரத்து வசதிக்குறைவுகளையும் பொருட்படுத்தாது இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் கூடியிருந்தனர்.

பாலஸ்தாபனம் நடைபெற்றபோதிலும் அபிஷேகங்களும், நவராத்திரி, சிவராத்திரி போன்ற முக்கிய தினங்களும் வழமைபோல் நடைபெறும் ஆனால் சுவாமி எழுந்தருளி வீதிவலம் வருதல் மட்டும் நடைபெறாது.

திருக்கேதீஸ்வரநாதன், கௌரி அம்பாள் கோவில்களுக்கு எதிர்வரும் ஆவணி மாதத்தில் அத்திவாரக்கல் நாட்டப்படும். இருகோவில்களுக்கும் வேண்டிய கருங்கற்கள் செப்பனிடப்பட்டு தயாராகவிருக்கின்றன. அடியார்களின் பண உதவி தாராளமாகக் கிடைத்தால் ஒரு வருடத்திலேயே கட்டடத்தை முடிவுறச்செய்யலாம் என திருக்கேதீச்சர திருப்பணிச் சபையார் எதிர்பார்க்கின்றனர்.

# பத்தேகம நால்வர் கொலை வழக்கு விசாரணை ஆரம்பம்

காலி, வெள்ளி

பத்தேகம நால்வர் கொலை வழக்கு காலி அசைஸ் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது காலியில் சட்ட வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் தி. பரமானந்தன் முதலாவதாகச் சாட்சியமளித்தார்.

அசைஸ் கமிஷனர் திரு. டி கியு எம் சிறிமானே முன்னிலையில் இவ் வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகிறது

ஜோர்ஜ்எட்வின் ரொட்ரிகோ(69 வயது) அவரது மனைவி குமாரசிறி(67) அவர்களின் மகன் உடெயன ரொட்றிகோ(32) மகள் செல்வி நந்தாவதி ரொட்றிகோ (25) ஆகியோரை 1969ம் ஆண்டு ஜூலை மாதம் 7ந் திகதி காலி-பத்தேகம வீதியில் கீன்பியெல என்ற இடத்தில் இ. போ. சபை பஸ்ஸில் வைத்துக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாக பத்தேகமையைச் சேர்ந்த பெனட் எக்கநாயக்கா அவரது சகோதரர் லயனல் எக்கநாயக்கா, கே பி ஜி விக்சன், தயானந்த குமாரசிறி, யு ஜி. நந்ததாச அவரது சகோதரர் யு ஜி சோமரத்தின, என் டபிள்யு டபிள்யு பி குணசேன ஆகியோர்மீது இவ் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

1969ம் ஆண்டு ஜூலை 8ந் திகதி நான்கு பேரின் சடலங்களையும் தாம் பரிசோதனை செய்ததாகவும் நால்வரின் உடல்களிலும் கத்திக்குத்துக் காயங்கள் பல இருந்ததாகவும் டாக்டர் பரமானந்தன் தமது சாட்சியத்தில் கூறினார். வெட்டுக் காயங்களினால் ஏற்பட்ட இரத்தப்பெருக்கும் அதிர்ச்சியும் நால்வரின் மரணத்துக்கும் காரணமாக இருக்கலாமென அவர் கறித்துத் தெரிவித்தார்.

இ போ ச பஸ் சாரதி எம் டபிள்யு ஏ புத்ததாசா என்பவர் சாட்சியமளிக்கையில் சம்பவதினம் கீன்பியெல உபதபாற் கந்தோருக்கருகேயுள்ள பஸ்தரிப்பிடத்தில் பஸ்ஸை நிறுத்துமாறு மணி அடிக்கப்பட்டதாகவும் தாம் பஸ்ஸை நிறுத்தியதும் பஸ் பிரயாணிகள் மத்தியில் அல்லோலகல்லோலம் ஏற்பட்டதாகவும் தெரிவித்தார். சாரான் அணிந்திருந்த ஓர் இளைஞன் கையில் கத்தியுடன் பஸ்ஸில் ஏறியதாகவும் 'டிறைவர் பஸ்ஸைப் பொலிசுக்குக் கொண்டுபோ' என்று ஒரு பிரயாணி சத்தமிட்டதாகவும் தாம் பஸ்ஸை எடுக்க எத்தனித்ததாகவும் புத்ததாசா கூறினார் அச் சமயம் 'பஸ்ஸை எடுத்தால் நீயும் கொல்லப்படுவாய்' என்று சத்தம் கேட்டதும் பஸ்ஸை நிறுத்திவிட்டு நடந்து சென்று ஒருகாரில் பொலிஸ் நிலையம் சென்று பொலிசாருடன் வந்ததாகவும் புத்ததாசா கூறினார். திரும்பி வந்தபோது மகனும் தாயும் பஸ்ஸுக்குள் இறந்து கிடந்ததையும் தகப்பன் வீதியோரத்தில் வாய்க்கால் கிடந்ததையும் மகள் பாதி மூடிய கிணற்றுள் கிடந்ததையும் கண்டதாக புத்ததாசா கூறினார். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

மரக் கூட்டுத்தாபன

## யாழ்ப்பாணக் கிளையை மூடுவதற்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்திலுள்ள மரக்கூட்டுத்தாபனக் கிளை காரியாலயத்தை மூடுவதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்கு யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் பலத்த எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள இக் கிளைக் காரியாலயத்தை மூடிவிட்டு அனுராதபுரத்தில் இக் கிளையை இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் இதனால் வடபகுதி மக்களுக்கு பெரும் கஷ்டம் ஏற்படும் என்றும் மாநகர சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

வவனியா, மன்னார் யாழ்ப்பாண மாவட்டங்களுக்கு இக் கிளையே பொதுவாக இருந்துவருவதாகவும் இக்கிளை மூடப்பட்டால் வடபகுதிமக்கள் மரவிஷயமாக அனுராதபுரம் செல்லவேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இக் கிளையை மூடவேண்டாமென தபால் அமைச்சருக்கு மாநகரசபை உறுப்பினர்கள் தந்தி அடித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## யாழ். நகரபலநோக்க சமாஜத் தலைவராக துரையப்பா தெரிவு

யாழ்ப்பாணம், சனி

பாவனையாளர்களுக்கு சகல பொருட்களும் இலகுவாக கிடைக்க வழிசெய்வேன் என்று யாழ் நகர பலநோக்கு கூட்டுறவுச் சமாஜத்தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. அல்பிரட் துரையப்பா தெரிவித்தார்.

சங்க டிப்போக்களை திரு. அல்பிரட் துரையப்பா நேற்றுப் பார்வையிட்டு பாவனையாளர்களுக்கு பொருட்கள் கிடைக்கின்றதா என்பதை அறிந்துகொண்டார்.

கூட்டுறவுச் சம்மேளனக் கட்டிடத்தில் நடந்த யாழ் நகர பலநோக்கு கூட்டுறவு சமாஜகூட்டத்தில் திரு. அல்பிரட் துரையப்பா தலைவராகவும் செல்வராசா உபதலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

இக் கூட்டத்தில் புதிய சங்கத் திட்டங்கள் பற்றி விளக்கிக்கூறப்பட்டது.

## வளரும் நாடுகளில் பத்திரிகைகளின் பங்கு

### சிங்கப்பூர் பிரதமர் கருத்து

ஹெல்சிங்கி, ஜூன் 11

தங்கள் மக்கள் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டுமென்றும் வளர்ச்சிக்காக தம்மை ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டுமென்றும் புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகள் எதிர்பார்க்கும் இந்த வேளையில் மேற்கத்திய நாடுகளில் நடப்பவைகள் பற்றியடித்தும், பார்த்தும் இந்நாடுகளிலுள்ள மக்கள் குழப்பங்களுக்குள்ளாகி வருகிறார்கள்.

ஆனைதிரைப் போரி நடத்தப்படும் பயங்கர ஆர்ப்பாட்டங்களையும் உள்ளூர் கொரில்லாக்கள் பற்றிய நிகழ்ச்சிகளையும், போதை வஸ்துக்கள், சுதந்திரக் காதல், ஹிப்பிக்கள் போன்றவை பற்றியும் இந்த மக்கள் பத்திரிகைகளில் வாசிக்கிறார்கள் தொலைக் காட்சிகளில் கண்டு ரசிக்கிறார்கள்.

சிங்கப்பூர் பிரதம மந்திரி திரு. லீகுவான்யூ இங்கு சர்வதேச பத்திரிகையாளர் நிறுவனத்தில் பேசுகையில் கூறினார்.

வெளிநாட்டு செய்திகளை புதிய நாடுகள் குறிப்பாக சிறிய நாடுகள் முற்றாகவே புறக்கணித்து விடமுடியாது என்று குறிப்பிட்ட திரு லீகுவான்யூ மேலும் சொன்னதாவது:- சில நாடுகள், சீனா, குருஷேவ் ஆட்சிக்கு முந்திய ரஷ்யா போன்றவை வெளிநாட்டுச் செய்திகளை முற்றாகவே தடை செய்திருந்தன: ஆட்சியாளர் வெளியுலகம் பற்றி சொல்வதைத் தான் மக்கள் நம்பவேண்டியிருந்தது. தனித்து வாழும் இப்படியான நிலைமைகளின் காரணமாக பெரும் நஷ்டங்களை எதிர் நோக்கவும் நேரும்.

மேற்கிலிருந்து நல்லவைகளை மாத்திரம் எடுத்துக்கொள்வது முடியாத காரியமாகும். இதை நாங்கள் சிங்கப்பூரில் பரீட்சித்துப் பார்த்தோம். ஆனால் நல்ல நிகழ்ச்சிகளை உருவாக்குவதற்கு பெரும் செலவு ஏற்படுகின்றது. சாதாரண காட்சிகளைப் பார்ப்பவர்களே அதிகமாகிவிட்டார்கள்.

புதிய நாடுகளில் உள்ள ஆங்கில மொழி பத்திரிகைகள் பற்றி குறிப்பிடுகையில் அவர் சொன்னதாவது:-

இந்த நாடுகளில் ஆங்கில பத்திரிகைகள் பலவும் சுதந்திரத்துக்கு பின் கைமாறிவிட்டன. ஆனால் இந்தியா இலங்கைபோன்ற நாடுகளில் இப்பத்திரிகை போக்கு எதிர்மறையாகவே இருந்து வருகின்றது.

இலங்கையில் இடதுசாரி அரசாங்கங்கள் இரண்டு தடவைகள் ஆங்கில பத்திரிகைகளை தேசியமயமாக்க முயற்சி எடுத்தன.

தற்போது அங்கு எல்லா செய்திகளும் தணிக்கை செய்யப்படுகின்றது. சேகுவேரா இயக்கம்பற்றி மிகையான கற்பனைகளுடன் செய்திகளை அனுப்பும் வெளிநாட்டு நிருபர்கள் கட்டுப்படுத்தப்படுகிறார்கள் அல்லது வெளியேற்றப்படுகிறார்கள். நாற்றுக்கணக்கான இந்தப்பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளில் இந்தநாடுகள் எவ்வளவு தூரம் சிக்கல்களுக்காளாகின்றன என்பது எவருக்கும் தெரியாது.

இந்தப்புதிய நாடுகளில் இந்தப்போது ஜனத்தொடர்பு சாதனங்கள் எவ்வாறு இயங்கவேண்டும்? சிங்கப்பூரைப் பொறுத்தவரையில் என்றால் ஒன்று சொல்லமுடியும்.

எமது நாட்டில் இந்த மக்கள் தொடர்பு சாதனங்கள் எமது கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் போதிக்கப்படும் ஒழுங்குகள் கலாசாரங்களுக்கு ஊறுவிளைவிக்காதவகையில் உற்வேகம் பெறவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

## மரண அறிவித்தல்

### சண்முகம் நாகமுத்து

சண்முகம் நாகமுத்து காலமாகி விட்டார், இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் சுற்றகம், அம்பலவாணர் ஆகியோரின் தாயாரும், அம்பலவாணர், இராசரத்தினம் ஆகியோரின் பேத்தியாரும், நாகலிங்கத்தின் மாமியாரும் பார்வதி சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை ஆகியோரின் பெரியதாயாருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு 6/1 வயிரவர் கோவில் ரோட்டு ஈச்சமோட்டையிலிருந்து துண்டி மயானத்திற்கு ஈமக்கிரியைகளுக்கு எடுத்துச் செல்லப்படும், தகவல்- ஆ. சின்னத்தம்பி,

2495

## மரண அறிவித்தல்

### ச. கந்தையா

காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் மகனும், முத்தம்மாவின் அருமைக் கணவரும், சிவசுப்பிரமணியம், (இலங்கை மின்சாரக் கூட்டுத்தாபனம் சுன்னாகம்) நடராசா (பாடசாலைக்கட்டடப் பொறியியலாளர் கல்வி அமைச்சு) வடமத்திய மாநிலம் அநுராதபுரம், சங்கரப்பிள்ளை (இலங்கைப் போக்குவரத்துச்சபை, காரைநகர்) தனலட்சுமி, வள்ளிநாயகி ஆகியோரின் தந்தையும், தம்பிஐயா, திலகவதி, கனகம்மா (ஆசிரியை மெமோரியல், மானிப்பாய்) வரதராசா (ஓ. போ. ச. அனுராதபுரம்) ஆகியோரின் மாமனுமான திரு. கந்தையா காலமானார். அன்னாரது பூதவுடல் இன்று 12-6-71 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுழிபுரம் கிழக்கு 'ராம பவனம்' இல்லத்திலிருந்து தனக்கிரிலைக்காக திருவடி நிலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

2841

வடபகுதி அசைஸ் விசாரணை

## மன்னார் கொலைவழக்கு; எதிரிக்கு 1000 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், சனி

மன்னார் கொலை வழக்கில் எதிரிக்கு 1000 ரூபா அபராதம்விதிக்கப்பட்டது. இவ் வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 70ம் ஆண்டு செப்டம்பர் 4-ம் தேதி மன்னாரிலுள்ள திருக்கேதீஸ்வரத்தில், சின்னான் வல்லிபுரம் என்பவரை கொலை செய்ததாகவும் செல்லப்பா என்பவருக்குப் படுகாயம் விளைவித்ததாகவும், எம். யோகராசா என்பவர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி கைமோசக் கொலைக் குற்றத்திற்கு குற்றவாளி யென்பதையும் படுகாயம் விளைவித்த குற்றத்தையும், ஒப்புக்கொண்டார். இதைத் தொடர்ந்து நீதியரசர் 1-வது குற்றச்சாட்டுக்கு 1000 ரூபா அபராதம் விதித்து, கட்டத்தவறினால் 2 வருட கடூழியச் சிறைத் தண்டனை எனத்தீர்ப்பளித்தார். 2-வது குற்றச்சாட்டில் 500 ரூபா பொறுப்பில் 3 வருட நன்னடத்தை பிணையில் செல்லுமாறு நீதியரசர் உத்தரவிட்டார்.

எதிரி சார்பில் அட்வகேட் கே. வி. என். சண்முகநாதன் புறக்டர் ஆர் விஸ்வநாதன், புறக்டர் எம் பாலசிங்கம் ஆகியோரின் உதவியுடன் ஆஜரானார், எதிர்காக அரசாங்கத்தால் புறக்டர் எம் மயில்வாகனம் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரியதரப்பில் அட்வகேட் சந்திரசேகரா ஆஜரானார்.

அசைஸ் விசாரணை நாளைவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

## கருவாட்டுக்கு உத்தரவாதவிலை

செங்கலடி, வெள்ளி

கருவாடு உற்பத்தியாளர்களிடமிருந்து உத்தரவாதவிலைத் திட்டத்தின் கீழ் கருவாடு கொள்முதல் செய்ய இலங்கை மீன்பிடிக்கூட்டுத்தாபனம் முன்வந்துள்ளது.

கொள்முதல் செய்யப்படும் கருவாடுகள் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுமென்று, நகர்ப்புறங்களில் மேலும் நாற்பத்தைந்து விற்பனவு நிலையங்களைத் திறப்பதற்கு மீன்பிடிக்கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், தெரிகிறது.

உற்பத்தியாளர்கள் தமது கருவாட்டை இந்த விற்பனவு நிலையங்களில் குறிப்பிட்ட விலைக்கு விற்பனை செய்யலாம் கருவாடு உற்பத்தியாளரின் நலன் கருதியே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

## சிறப்பு மலர் வெளியிட முடிவு

அளவெட்டி, வெள்ளி

இம்மாதம் 30ம் திகதி நடைபெறவிருக்கும் நாயன்மார்கட்டு ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு அன்றையதினம் சிறப்புமலர் ஒன்றை வெளியிடுவது என மேற்படி ஆலய பரிபாலன சபை தீர்மானித்துள்ளது.

சின்னவெங்காயம்

## உத்தரவாதவிலை அதிகரிக்கும்

கோட்டை, வெள்ளி

விவசாயிகளை சின்னவெங்காய உற்பத்தியில் ஊக்குவிக்கும் பொருட்டு சின்ன வெங்காயத்தின் உத்தரவாத விலையை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அடுத்தவருடம் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனையபகுதிகளில் 4000 ஏக்கரில் சின்ன வெங்காயம் உற்பத்திசெய்ய அரசு தீர்மானித்துள்ளது

## யாழ்.நகரில் மின்தறி நிலையம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் விரைவில் மின்தறி நிலையமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக, யாழ் நகர பலநோக்கு கூட்டுறவு சமாஜ தலைவர் திரு அல்பிரட் துரையப்பா நேற்று தெரிவித்தார்.

## தாயகம் திரும்பினர்

மன்னார், வெள்ளி

730 இந்தியர்கள் தாயகம் சென்றனர். தலைமன்னார் துறைமுகத்திலிருந்து இவர்கள் பயணமானார்கள். இப்பிரயாணிகளது பயணத்துக்காக சங்க இலாகாவினர் தொடர்ந்து 14 மணித்தியாலங்கள் கடமையாற்றி இவர்களுக்கு உதவி செய்தனர்.


## திருமண அழைப்பு

மணமகன்:- செல்வன் வி. பரிபூரணானந்தசர்மா
(ஆசிரியர், மெமோரியல் மகாவித்தியாலயம், மானிப்பாய்)

மணமகள்:- செல்வி செ. ரேவதி

முகூர்த்தநாள்:- 14-6-71 திங்கட்கிழமை பகல் 10 மணிக்கும் 12மணிக்கும் இடையில்.

இடம்:- மணமகள் இல்லம். (484, கே. கே. எஸ். வீதி. யாழ்நகர்.)

பெண் அழைப்பு:- 14-6-71 திங்கட்கிழமை மாலை.

வரவேற்பு:- 15-6-71 பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை மணமகன் இல்லத்தில் நடைபெறும் (கணேச வாசம், உடுவில்)

உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். 2623

## திருமண அழைப்பு

லோகசிகாமணி — வனஜா

எமது சிரேஷ்ட புத்திரி வனஜா அவர்களுக்கும், டாக்டர் ரி. செல்லையா (கோலாலம்பூர்) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் லோகசிகாமணி அவர்களுக்கும் (மலாயன் ரேயில் வியான சேவை) நாளை (13-6-71) பகல் 11 மணி வரையிலுள்ள சுபவேளையில் மணமகளில்லத்தில் திருமணம் நடைபெறும். S.P. ராஜாவும் பாரியாரும், கஸ்வதி நகை மாளிகை, வல்வெட்டித்துறை.

3178


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் [illegible] 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.